# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக**

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*************

முறையீட்டு மனு எண்.0202/2015

ஆணை எண். 007/2015

நாள்: 23/09/2015

திரு. அ. சரவணன்,
திருமதி. செ. சரஸ்வதி,
(ஊராட்சிமன்ற உறுப்பினர்கள்)
எண்.40, கந்தப்பார் வீதி,
அய்யன்பேட்டை & அஞ்சல்,
வாலாஜாபாத் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்–631 601.

- முறையீட்டு மனுதாரர்

தலைவர்,
அய்யன்பேட்டை ஊராட்சி,
வாலாஜாபாத் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்–631 601.

- எதிர் மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், அய்யன்பேட்டை ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் திரு.அ.சரவணன் மற்றும் திருமதி செ.சரஸ்வதி ஆகிய இருவரும் மேற்படி ஊராட்சியில் வரவு செலவு கணக்கு சரிவர கையாளாமலும், புதிய திட்டங்களும் செயல்படுத்தாமல் இருப்பதாலும், ஊராட்சி மன்றத்தை கலைக்கக்கோரி முறையிட்டுள்ள முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு மனு எண்.202 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

<u>**ஆணை**</u>

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், அய்யன்பேட்டை ஊராட்சியில் வரவு செலவு கணக்கு சரிவர கையாளாமலும், புதிய திட்டங்கள் எதுவும் செயல்படுத்தாமல் இருப்பதால், மேற்படி ஊராட்சி மன்றத்தை கலைக்க ஆவண செய்யுமாறு வார்டு உறுப்பினர்கள் திரு.அ.சரவணன் மற்றும் திருமதி செ.சரஸ்வதி ஆகிய இருவரும் இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்துள்ளனர். தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டப் பிரிவு 2, உப பிரிவுகள் (7) மற்றும் (11)–ல் அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி, ஊராட்சி மன்றங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் இவ்வமைப்பின் விசாரணை வரம்பிற்கு உட்படமாட்டார்கள். எனவே இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்ட முறையீட்டு மனுவை, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிவைக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் முடிவுசெய்து அதன்படி ஆணையிடுகிறது.

ஒம்/– முனைவர் சோ. அய்யர்
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//**

23/9/15
கண்காணிப்பாளர்

பெறுநர்

**மாவட்ட ஆட்சியர்,**
**காஞ்சிபுரம் மாவட்டம்.**
**காஞ்சிபுரம் (இணைப்புடன்)**

**நகல்**

திரு. அ. சரவணன்,
திருமதி. செ. சரஸ்வதி,
(ஊராட்சிமன்ற உறுப்பினர்கள்)
எண்.40, கந்தப்பார் வீதி,
அய்யன்பேட்டை & அஞ்சல்,
வாலாஜாபாத் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்–631 601.